## Chapter - 14 - Speech for 10th September 2022 – 2

இந்த அத்தியாயத்தின் சுருக்கமாக நிலையான ஒன்று வரையற்ற பிரம்மம் என்று இருந்தது. அடுத்தது அந்த நிலையான ஒன்றுக்குள் ஒன்றுபட்டு இருந்த அனைத்தும் வரையறைக்கு உட்பட்ட வடிவங்களாக, செயல்களாக, பிரிவினைகளுடன் கூடிய நிகழ்வுகளாக மாறி பிரபஞ்சமாகிறது. அதாவது இந்த பிரபஞ்சம் பிரம்மத்தின் நீட்சி - EXTENSION OF SATCHITHANANDA அதை ஏற்படுத்தும் எண்ணம் REAL IDEA - அதற்காகத் தோன்றியது அதிமனம் அதன் சித்தம், சத்திய சித்தம். இது ஞானம், உறுதி, ஆற்றல் அனைத்தையும் சித்த பூர்வமாகக் கொண்டது. தன்னையும் அறியும், பிரம்மத்தையும் அறியும். தன்னில் இருந்து வெளிப்பட்ட அனைத்தையும் அறியும். அது பகுக்க முடியாத TRIUNE PRINICIPLE என்னும் முப்பெரும் கொள்கைகளை வெளிப்படுத்துகிறது. ஒருமை, ஒருமையை வேறுபடுத்தி பார்த்தல் - பிரித்து பார்த்தல் அல்ல-, வேறுபடுத்தி பார்த்தல், பின் வேறுபாட்டில் இருக்கும் ஒருமையை பார்த்தல். அப்படி வெளிப்படுத்தினாலும், ஒருமை நிலையில் இது இருப்பதால் அப்படி வெளிப்படுத்தும் அனைத்திலும் தன் இறை அம்சத்தையும் வெளிப்படுத்துகிறது. சிருஷ்டி, பரிணாமம் என்னும் இரண்டு வகைகளில் அது நடக்கிறது. அதாவது சத்சித்ஆனந்தம் படிப்படியாக தன்னை மறைத்துக் கொண்டு ஜடத்தில் இறங்குகிறது. இது சிருஷ்டி INVOLUTION. பின் ஜடத்தில் இருந்து மீண்டும் வெளிப்பட்டு உயர் மனநிலைகளை அடைந்து மீண்டும் இறை நிலையை எட்டுகிறது. இது பரிணாமம் - EVOLUTION . இந்த இரண்டு இயங்கங்களையும் பொறுப்பேற்று நடத்துவது அதிமனம். அதனால் பிரம்மத்தின் வரையறையற்ற தன்மை அத்தனை சிருஷ்டியிலும் இருக்கிறது. அது வெளிவரத் துடிக்கிறது. அதை புரிந்து கொண்டு அதை நாம் வெளியே வரவிட்டால், நமக்கு அனைத்தும் ஆனந்தமே என்பது இந்த அத்தியாயத்தின் சுருக்கம்.

ஒரு விதையில் இருந்து மரம் வர வேண்டும் என்பது ஒரு பொது idea . அதில் என்ன வர வேண்டும், எப்படி வர வேண்டும், என்ன தரவேண்டும், எவ்வளவு தர வேண்டும், அதை யார் அனுபவிக்க வேண்டும் என்று முடிவு செய்வது REAL IDEA. வரையற்ற பிரம்மம் இந்த REAL IDEA மூலம் தன்னை எப்படி வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தவுடன் தன்னை குறுக்கிக் கொண்டு, ஆரஞ்சு விதை, மாங்கொட்டை, ஆப்பிள் விதை என்று வடிவங்களாக படைக்கிறது. அது போல படைக்கப்பட்டது தான் இந்த

பிரபஞ்சமும், மனிதன் எனப்படும் வடிவங்களும். அதாவது அனைத்தையும் அதிமனமே தீர்மானிக்கிறது. எல்லாமே அதன் திட்டப்படி நடக்கிறது. அதன் ஞானத்தின் படி, அதன் உறுதியின் படி, அதன் ஆற்றலின் படி நடக்கிறது. அதன் கட்டளை படி நடக்கிறது. அதை விளக்கத் தான் மரபு , OMNIPRESENCE, OMNISCIENT , OMNIPOTENCE என்று எங்கும் இருப்பவன், எல்லா வலிமையையும் கொண்டவன், எல்லாம் அறிந்தவன் என்று கூறுகிறது. ஆனால் அந்த விளக்கம் ஒருமை, ஆர்வம், ஏற்படுவதற்கு பதிலாக, நம்முள் தேட வைப்பதற்கு பதிலாக இணைக்க முடியாத ஒரு பிரிவினை இருப்பது போல காட்டப்பட்டு விட்டது, சொல்லப்பட்டு விட்டது என்பதால், அது நம்முள் இருப்பதை நாம் உணர முடியவில்லை.

முன்பு சொன்னது போல மனம் நம்முள் எங்கோ இருக்கிறது என்று நாம் நம்புவது போல, உணர்வது போல, அதிமனமும் நம்முள் தான் உள்ளது என்று உணர வேண்டும், நம்ப வேண்டும். அப்போது தான் பகுத்தறியும் சித்தம், தொகுத்தறியும் சித்தம் என்னும் அவற்றின் படைப்பாற்றலை நாம் புரிந்துக் கொள்ள முடியும், வெளிப்படுத்த முடியும்.

Comprehending SUPERMIND என்பதை IDENTITY WITH SATCHITANANDA, சதசித்தானந்ததுடன் ஒன்றுவது  என்று நடைமுறை விளக்கமாக தருகிறார் கர்மயோகி.  APPREHENDING OF SUPERMIND  என்பதை HOW TO EXPRESS IT, அதை எப்படி வெளிப்படுத்துவது  என்று பார்ப்பது என்கிறார். அதை இன்னும் நடைமுறைக்கு எளிதாக comprehending SUPERMIND  என்பதை அன்னை விரும்பும் பண்புகள் என்று எடுத்துக் கொண்டு APPREHENDING SUPERMIND என்பதற்கு, அதை எப்படி நாம் வெளிப்படுத்துவது என்பதை நம் மனம் ஆராய்வதை எடுத்துக் கொள்ளலாம்.

DESTINY OF THE INDIVIDUAL அத்தியாயத்தின் சாரம் மனிதனின்,  அவன் பிறப்பின்  நோக்கமே அதிமனதை பற்றிய மெய்யுணர்வு பெறுவதும் அதை வெளிபாடுத்துவதும் தான் என்று இருக்கும். Human destiny is to realise SUPERMIND. மனம் என்பது அதிமனதின் வெளிப்பாடு அல்லது உள்ளடங்கள் என்பதால், அதில் அதிமனதின் ஆற்றல், ஞானம், உறுதி ஆகியவை நிச்சயம் இருக்கிறது. அதனால் தான் தினசரி செய்தி ஒன்றில், சுயநலமிக்கு சேவை செய்யாதே, முழு சுயநலமிக்கு சேவை செய் என்று எழுதியிருப்பார் கர்மயோகி. அதன் பொருள் சுயநலமியான மனிதனுக்கு சேவை செய்யாதே எல்லாவற்றையும் தன் இஷ்டப்படியே நடக்க வேண்டும் என்று நினைக்கும் அன்னைக்கு சேவை செய் என்கிறார். முழு சுயநலமிக்கு முழு ஆதரவு கொடுப்பது நம் முழுச் சுயநலத்தை வில க்கி பரிணாமத்தில் வளர்வதாகும்.. அப்படி அவரே

அனைத்தையும் தீர்மானிக்கிறார், நடத்துகிறார், தன்னை வெளிப்படுத்துகிறார் என்னும் போது, அதை நேரடியாக செய்யாமல், அதற்கான பண்புகளை படைப்பாற்றல் கொண்ட பண்புகள், இறைவனுக்கும், அன்னைக்கும், நமக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்தும் பண்புகளை, குணங்களை ஏற்படுத்தி, அதன் மூலம் இந்த சிருஷ்டி பரிணாமம் என்பதை நடத்துகிறார். SPIRITUAL ATTRIBUTES என்று கூறப்படும் அதை ஆரம்பத்தில் பகவான் SILENCE, HARMONY, ONENESS, KNOWLEDGE, LOVE, JOY, BEAUTY என்றே எழுதுகிறார். ஆனால் அன்னை அதை பன்னிரெண்டாக பிற்காலத்தில் சொல்கிறார். INFINITY, ETERNITY, SILENCE, PEACE, UNITY, TRUTH, KNOWLEDGE, POWER, LOVE, BEAUTY, JOY, PURITY என்று பன்னிரெண்டு விதமான படைப்பாற்றல் கொண்ட spiritual attributes . ஆன்மீக பரிமாணங்களை பற்றி பேசுகிறார். இதற்கான விளக்கத்தை பின்னால் பார்க்கலாம்.

அப்படி நாம் அந்த படைப்பாற்றல் கொண்ட பரிமாணங்களுக்கு போக வேண்டும் என்றால் , நாம் முதலில் இந்த காலம் அளவு, time and space போன்றவற்றில் இருந்து வெளியே வர வேண்டும். அதாவது அதை உருவாக்கும், நம்பும் மனதில் இருந்து வெளியே வர வேண்டும். அடுத்தது, நம் மனமே நம்மை நிர்ணயிக்கறது என்பது போலவே நம் அதிமனமே நம்மை நிர்ணயிக்கிறது என்பது புரிய வேண்டும். அதற்கு காலம், காலம் இல்லாத நிலை, காலத்துள் காலத்தை கடந்த நிலை TIME , TIMELESSNESS, SIMULTANEOUS TIME என்பதை பற்றி சிறிது புரிய வேண்டும். பிறகு அக நிலை, புறநிலை, SUBJECTIVE -OBJECTIVE பற்றி சற்று புரிய வேண்டும். இவை புரிந்தால் நேரம், காலம், இடம், நிகழ்வுகள் எல்லாம் நம் சித்தத்தின் நீட்சி தான் என்பது புரியும். IT IS ALL EXTENSION OF CONSCIOUSNESS .

உதாரணமாக, நான் ஆங்கிலம் கற்றதை பற்றி சொல்லியிருக்கிறேன். நான் படித்தது, அதுவும் எழுத்து கூட்டி படித்தது, புரியாமல் படித்தது, சில வார்த்தைகளுக்கு மட்டும் அகராதியில் பொருளை பார்த்தது என்று எடுத்தால், அது காலத்தால் மிகக் குறுகியது. ஒரு ஆண்டு என்று எடுத்துக் கொண்டால், 400 அல்லது 500 வார்த்தைகள் தெரிந்துக் கொள்ளலாம். சில SENTENCEகளை எழுத, பேச தெரிந்துக் கொள்ளலாம். அது காலம் அதற்கான கெடு, இடம் ஆகியவற்றை உள்ளடக்கியது. புராணங்களில் வருவது போல படிக்காத ஊமை ஆங்கிலம் பேசினால், அது காலத்தை, இடத்தை கடந்த நிலை என்று எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த ஒரு வருட உழைப்பு பலருக்கும் பல வருடம் உழைத்தாலும், படித்தாலும், பழகினாலும் வராத அளவிற்கு, ஆங்கிலம் பேசும், கட்டுரைகள் எழுதும் திறமை வந்தது என்பது காலத்துள் காலத்தை கடந்த நிலை. SIMULTANEOUS TIME. அதற்கு காரணம்,

படைப்பாற்றல் கொண்ட பண்பான -  ஆர்வம், முன்னேற்றம், விடாமுயற்சி - ASPIRATION , PROGRESS , PERSEVERANCE  போன்றவற்றை எடுத்துக் கொண்டு, அவை அன்னை SYMBOLலில் இருக்கும் படைப்பாற்றல் கொண்ட பரிமாணங்கள் பண்புகள் என்பதால் அவை காலத்தை சுருக்கியது.

இன்னொரு உதாரணம் - 2019-இல் சில பொருட்களை இறக்குமதி செய்து விற்பதற்காக China செல்ல திட்டமிட்டோம். SINGAPORE சென்று அது பற்றி தெரிந்த, CHINESE மொழி தெரிந்த ஒருவரை அழைத்துக் கொண்டு CHINA செல்வதாக திட்டம். திட்டமிட்டபடி SINGAPORE சென்றோம்.

முதல் நாள், மறுநாள் இரு நாளும் அந்த நபர் ஏதேதோ சாக்கு சொல்லி வரவில்லை. எங்கள் SINGAPORE VISA ஒரு வாரம் தான் என்பதால், நாமே ஏதாவது செய்வோம் என்று சிந்தித்து அன்னையிடம் சொல்லிவிட்டு LOCAL BUSINESS DIRECTORYஇல் அந்த மாதிரி பொருட்களை DEAL செய்பவர் யாராவது இருக்கிறார்களா என்று தேடினேன். ஒரு பெயர் என்னை பேசத்  தூண்டியது. அவர்களிடம் பேசியபோது அவர்களே தயாரிப்பாளர்கள் என்பதும் - அதை CHINA விலைக்கே இங்கேயே தருவதாகவும், அதுவும் சின்ன QUANTITYக்கு கூட எங்கள்  பெயரை பொறித்து தருவதாகவும் சொன்னார். எங்கள் BRANDஇல் PRODUCTஐ பற்றி அப்போது நாங்கள் நினைக்கவும் இல்லை. அதற்கு ஒரே CONDITION நாங்கள் SINGAPOREஇல் கம்பெனி OFFICE வைத்து இருக்க வேண்டும் என்பதே. அதற்கு ஒரு SINGAPORE RESIDENT  தன் PR ஐ தர வேண்டும், கையெழுத்து இட வேண்டும் என்ற போது, இங்கு யார் இருப்பார்கள் எப்படி செய்ய முடியும், இன்னும் மூன்று நாள் தானே இருக்கிறது என்று நினைத்து முடியாது என்றோம். என்னுடன் வந்தவர், என் உறவினர் ஒருவர் சிங்ப்பூரில் இருக்கிறார், அவரிடம் கேட்போம் என்று சொன்னார். அவரிடம் கேட்ட போது அவர் உடனே சரி என்று சொல்லி - நீங்கள் சரியான சமயத்தில் வந்து இருக்கிறீர்கள், இப்போது வெளிநாட்டு முதலீடுகளை  வரவைக்க இந்த பதினைந்து நாளும் ஒரு scheme இருக்கிறது. OPEN WINDOW  SYSTEM இருக்கிறது. உங்கள் passport போதும் வேறு எதுவும் தேவையில்லை என்று DOCUMENT FILL செய்ய சொன்னார்.  அன்று வெள்ளி அங்கு விடுமுறை, என்றாலும் அவர் GOVERNMENTஇல் சற்று influence உள்ள நபர் என்பதால் unofficial ஆக செய்து கொடுத்தார். அடுத்தது account open செய்து குறைந்த பட்ச investment transfer செய்ய வேண்டும் என்றார்கள். மறு நாள் சனிக்கிழமை. DBS அல்லது OCBC வங்கியில் மட்டுமே செய்ய முடியும்., IOB போன்ற இந்திய வங்கிகள் கூடாது என்றார்கள். அதற்கான முயற்சிகளை செய்யும் போது இது SCHEME என்பதால் COMPANY REGISTRATION,  GST REGISTRATION செய்ய வேண்டும் என்றார்கள். அதற்காக அந்த SINGAPORE resident உடைய ஆடிட்டரை சென்று

பார்த்தோம். அவர் OFFICEக்காக , இடம் இல்லாமல் இதையெல்லாம் செய்ய முடியாது என்றார். வேண்டாம் என்னும் மனநிலைக்குச் சென்று விட்டோம். AUDITOR யாருக்கோ PHONE செய்து விட்டு, என் நண்பர் ஒருவர் ஒரு office சும்மா தான் வைத்திருக்கிறார். அதை வேண்டுமானால் CO-SHARINGஇல் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். அதற்கான ஏற்பாடுகளை ONLINE லேயே செய்தார். அது CECIL STREET எனப்படும் மிகப் பெரிய சர்வதேச கம்பெனிகள் மட்டுமே office வைத்துக் கொள்ள முடிந்த இடம். அந்த BUILDING இல் HSBCஇன் தலைமை அலுவலம் இருப்பதால் மிகவும் புகழ் பெற்ற BUILDING. அங்கே உங்களுக்கு இடம் எப்படி கிடைத்து என்று பலரும் பிறகு கேட்டார்கள். அதன் பிறகு அனைத்தும் சுமுகமாக வேகமாக முடிந்தது. இவை அனைத்தும் நடந்தது இரண்டு நாளில் அதுவும் கிட்டத்தட்ட விடுமுறை என்று கூறப்படும் நாட்களில். சாதாரணமாக இது நடக்க குறைந்த பட்சம் ஆறு மாதம் ஆகி இருக்கும். உண்மையில் SINGAPOREஇல் ஒரு BRANCH OFFICE என்பது நான் கனவிலும் நினைத்தது கிடையாது. பின்னாளில் இது பற்றி பேசும் போது உன் ASPIRATIONனின் PURITY என்றார் கர்மயோகி. அது படைப்பாற்றல் கொண்ட அன்னையின் பண்பு என்பதால், தானே சாதித்தது. அது காலத்தை கடந்த நிலை. காலத்துள் காலத்தை கடந்த நிலை. SIMULTANEOUS TIME என்பதற்கு உதாரணம் இது நடந்தது AUGUST 2019 இல்.

இந்தியா வந்த பிறகு ஒரு import நன்றாக நடந்தது. CHINA , SINGAPORE போன்ற நாடுகளில் COVID என்று தெரியவில்லை என்றால் கூட பலருக்கும் ஒரு புது வித ஜுரம் வருவதாகவும், மூச்சு திணறி இறப்பதாகவும் பரவியதால் JANUARY 2020 இல் இருந்தே அங்கே restriction ஆரம்பித்துவிட்டது. அந்த நேரத்தில் பண்புகள் என்று இல்லாமல் COMMON SENSE பொதுப்புத்தி என்ற பெயரில் ஒரு முடிவு எடுத்தேன். COVID பாதிப்பில் SINGAPORE OFFICE இரண்டு வருடம் நஷ்டம் ஏற்படுத்தியது என்பது முதல் தற்போது UKRAINE போர் PETROL PROBLEM முதல், GERMANY HEAT WAVE, இன்று காஸ் தட்டுப்பாடு , குளிர் விடுமுறை வரை எது நடந்தாலும் எனக்கு அதை ஒட்டிய பாதிப்பு ஒன்று இறக்குமதியில் ஏற்படுகிறது. அதாவது பண்புகள் இல்லா ஒரு நடவடிக்கை மூலம் காலத்துள் , இடத்துள் வந்துவிட்டேன். சமூகம், சூழல், சட்டம், காலம், இடம் என்று அனைத்து வரையறைக்குள்ளும். அதன் பாதிக்கும் தன்மைக்குள்ளும் வந்துவிட்டேன் மிகுந்த சிரமப்பட்டு, கடந்த கால சமர்ப்பணம் செய்து அதை விட பெரிய பண்பு ஒன்றை RISK எடுத்து செய்த போது அது வழிவிட்டது. கடந்த இரண்டு மாதமாக ஓரளவு பிரச்சினையில் இருந்து வெளியே வந்து கொண்டு இருக்கிறேன்.

இந்த இரண்டு உதாரணங்களும், என் ஆங்கிலம் கற்ற உதாரணம், SINGAPORE OFFICE உதாரணம் இரண்டும் எதை காட்டுகிறது என்றால், காலம், நேரம், இடம், சூழல் என்பதெல்லாம் நம் சித்தத்தின் உயர்வை பொறுத்ததே, நாம் எடுத்துக் கொள்ளும் உயர் பண்புகளை பொறுத்ததே, என்பதை காட்டுகிறது. நம் பிறப்பின் நோக்கமே நம் அதிமன நிலையை  நிரந்தரமாக அடைய வேண்டும் என்பது தான்.  அப்போது நாம் நினைத்துக் கூட பார்க்க முடியாத ஆனந்தம் நமக்கு கிடைக்கிறது.  அப்படி இல்லையென்றால், அந்நிலையை நினைவுபடுத்த மனம் முரண்பாடுகளை வாழ்வில் ஏற்படுத்துகிறது. அது துன்பமாக, தோல்வியாக நமக்கு தெரிகிறது.  அந்த முரண்பாடுகளை தொகுத்து அதன் முழுமையைப்  பார்க்கும் போது, அது இறைவனின் அனைத்து அம்சங்களையும் தன்னுள் கொண்டுள்ள பூரண ஞானமாக தன்னை வெளிப்படுத்துகிறது.  அது தொகுத்தறியும் சித்தம் COMPREHENDING SUPERMIND,  அடுத்தது, அவற்றை படைப்புகளில், அதாவது நம்மில் எப்படி வெளிப்படுத்த வேண்டும் என்னும் ஞானம் பகுத்தறியும் சித்தம். APREHENDING SUPERMIND .

அதாவது, இறைவனை படைப்புகளாக மாற்றுவதற்கும், அந்த படைப்புகளை மீண்டும் இறைவனாக மாற்றுவதற்கும் உள்ள பாலம் அதிமனம். அதை GOLDEN BRIDGE என்றும், CREATRIX , CREATIVE CONSCIOUSNESS  என்று பலவிதமாக குறிப்பிடுகிறார் பகவான். நாம் அதை MOTHER என்று எடுத்துக் கொள்ளலாம். அதாவது பிரம்மத்தின் குழந்தை அன்னை என்று எடுத்து கொள்ளலாம். கற்பனையில் அன்னையின் குழந்தை உருவ படம், NAUGHTYஆக, கொழு கொழு என்று திருட்டு முழியுடன் இருக்குமே, அதை உருவகம் செய்துக் கொண்டு, ஒரு குழந்தை எங்கே இருந்தாலும், தெருவில் விளையாடிக் கொண்டிருந்தாலும், வீட்டில் இருக்கும் தாயின் மனம் அதன் மீதே இருப்பது போல அதற்கு எது என்றாலும், பசி என்றாலும், அடிபட்டது என்று தெரிந்தாலும், உணர்விலேயே தெரிந்து வருவது போல, நம் நினைவை அந்த குழந்தை மேல், அதாவது அன்னையை குழந்தையாக உருவகப்படுத்தி, நம் கவனத்தை அதன் மேல் வைத்தாலே ஒரு ஆனந்தம் வரும். உங்கள் வீட்டில் அந்த படம் இருந்தால், செல்லமாக திட்டி பாருங்கள்., இரண்டு அடி கொடுங்கள் ஒரு பூரிப்பு, ஒரு பாசம் தானாகவே வருவது தெரியும். நாம் நினைத்தால் அன்னை குழந்தை போல நம்முடன் வருவார் என்பதை ஒரு அனுபவத்தின் மூலம் அன்னை ஒரு குழந்தை என்று மலர்ந்த ஜீவியத்தில் எழுதியிருந்தேன். TOKEN ACTக்கு அடுத்த படியாக கர்மயோகிக்கு பிடித்த கதை அது.

அல்லது பிரம்மத்தின் குழந்தை அன்னை என்பதை விட்டு, அது சந்திப்பு என்பதால், பாலம் என்பதால், படைப்புகளின் தாய் அன்னை என்பதாக எடுத்துக் கொள்ளலாம். அப்போது நம்மை குழந்தையாக அன்னையிடம் ஒப்படைத்து, அனைத்தையும், நம் தேவை அறிந்து ஒரு தாயாக அவரே தருவார் என்று இருக்கலாம். தன் மடியில் நிம்மதியாக உறங்குவதாக கற்பனை செய்யச் சொல்கிறார் அன்னை. அது வேறு வித ஆனந்தத்தை தரும். நான் முன்பு ஒரு கூடலில் சொன்னது போல ஒரு மலை அல்லது வெற்றிடம் எதிரில் நின்றுக் கொண்டு MOTHER என்று உரக்க கூறுவது போல, அடிவயிற்றில் இருந்து கத்துவது போல வெளியே சத்தம் வராமல், மனதுக்குள் உரக்க கூறி அழைத்தால், MOTHERஐ உள்ளே உணர முடியும். அதாவது அன்னை இருக்கும் அந்த தளம் சத்திய சித்தம். TRUTH CONSCIOUSNESS . அதுவே அனைத்து சிருஷ்டிக்கும் ஆரம்பமாகவும், முடிவாகவும், அதற்கான ஏற்பாடுகள், திட்டங்கள், சட்டங்கள் ஆகியவற்றை நிர்வகிக்கும் இடமாகவும் இருக்கிறது. அனைத்து வேறுபாடுகளுக்கான துவக்கமான இடமாகவும், அனைத்து ஒருமைக்கான முடிவான இடமாகவும் இருக்கிறது. அதை UNITARIAN CONSCIOUSNESS என்கிறார் பகவான். அதாவது இருத்தல், சித்தம், ஆனந்தம் மூன்றும் ஒன்றாக உள்ள EXISTENCE , CONSCIOUSNESS , BLISS மூன்றும் ஒன்றாக உள்ள இடம். அந்த நிலையை நம் மனதுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டே இருந்தால், அது பிறந்தது அதிமனதில் இருந்து என்பதால், மனது அதிமனதை சூட்சுமமாகப் பெற முடியும்.

மனம் பகுத்துப் பார்க்கவும், இணைத்துப் பார்க்கவும் உதவக் கூடிய ஒரு கருவியே. அது அடிப்படை ஞானத்தை கொண்டது அல்ல. ஆனால் மனதுக்கு அப்பால் ஒரு ஞான நிலை உள்ளது என்பதை அதற்கு புரிய வைத்துவிட்டால், அதை செயல்படுத்த விட்டால் அது அனைத்தையும் சரி செய்யும் ஞானத்தை வெளிப்படுத்தும். சூட்சுமமாக, உள்ளுணர்வு, உட்பார்வை மூலம் வெளிப்படுத்தும். உதாரணமாக ஒரு குழந்தையை நாம் வளர்ப்பதாக நினைத்தாலும், அனைத்தையும் நம் திட்டப்படி, வழிகாட்டல் படி நடப்பதாக இருப்பதை ஆராய்ந்து பார்த்தால், உண்மையில் அதன் அத்தனை வளர்ச்சி, நடத்தை, மனப்பான்மை ஆகியவை, அது பெரும்பாலும் இருக்கும் சூழலின் தாக்கம், அல்லது அந்த சூழல் சூட்சுமமாக தந்த ஞானம், ஆகியவற்றை அடிப்டையாகக் கொண்டதாகத் தான் இருக்கும். இதெல்லாம் எனக்கு பிறந்து தானா என்று பெரும்பயருக்கு தோன்றும் காரணம் இதுதான். அது போல நம் மனதை அதிமனதின் சூழலை தொடவிட்டால், அது சூட்சுமமாக அதன் ஆற்றலைப் பெறும். அதை செயல்படுத்த விட்டால், நமக்கு ஆனந்தம் என்று நினைக்கும் அனைத்தும் கிடைக்கும்.

மனம் என்பது பாதை தான். அதுவே முடிவு அல்ல. உதாரணமாக மனமே DEPRESSION , சோர்வு, ஏமாற்றம், இயலாமை என்று போனால் துன்பத்தை ஏற்றுக் கொண்டால். அதன் வேலையை அது எப்படி செய்ய முடியும். DEPRESSION , CHREERFULNESSஆக மாறும் போது தான் ஒரு படைப்பாற்றல் பிறக்கிறது. அந்த சந்திப்பை, junction ஐ இடைப்பட்ட தளத்தை நாம் உணர முடிந்தால், அந்த ஞானத்தை பெற முடிந்தால், நம்மால் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும். அதனால், என்ன செய்வது என்று தெரியாமல் நிற்கும் இடங்கள், தேவையில்லாமல் பேசும் இடங்கள், பேச்சுத்துணைக்கு ஆள் தேடும் இடங்கள், productivity உபயோகமான காரியம் செய்யாமல், TV SERIAL, FACEBOOK , INSTAGRAM , WHATSAAP பார்க்கும் நேரங்கள் ஆகியவை PROSPERITYக்கான இடங்கள் என்கிறார். குறிப்பாக BORE அடிக்கிறது என்னும் இடங்கள் நம் PROSPERITYக்கான இடங்கள் என்கிறார். காரணம், இந்த இடத்தில நாம் ஏன் இப்படி இருக்கிறோம் என்ற நினைவு வந்தால், மனது அதை நினைத்தால், நாம் எதை இழந்துக் கொண்டு இருக்கிறோம், அதை பெற தேவையான திறமை, திறன், மனப்பாண்மை என்ன என்பது புரியும். அதாவது அஞ்ஞானத்தையும் , ஞானத்தையும் இணைக்கும் இடத்திற்கு நாம் வந்து விட்டோம் என்று பொருள். அல்லது இந்த தளத்தில் நின்று, மாறிய மனப்பான்மையுடன் அன்னையிடம் கேட்டால் அதற்கான அனைத்தையும், சூழல் முதற்கொண்டு அனைத்தையும் தருவார். நம் ஆர்வம், திறமை, திறன் , சாதனை, ஆனந்தம் என்று அனைத்தும் வெளிப்படக் காத்திருக்கும் தளம் அது. காலத்தை சுருக்கும் இடம் அது. இன்று எனக்கு இருக்கும், CIVIL ENGINEERING , ELECTRONICS , CHEMICAL ENGINEERING பற்றிய அறிவு வெறும் படிப்பில் வந்தது அல்ல. ஒவ்வொரு தோல்வியிலும் நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்று கேட்டதால் ஒரு PERFECTION ஐ கேட்டதால் வந்தது.

மனம் பலவற்றை நினைக்கிறது. எப்போதும் ஒரு எதிர்பார்ப்பிலேயே இருக்கிறது. அதற்கான திட்டத்தோடேயே இருக்கிறது. அனைத்தையும் அதுவே செய்கிறது. அறிவு, உணர்வு, உடல் என்று அனைத்தையும் அதற்கு பயன்படுத்துகிறது. ஆனாலும் நாம் அறிந்த எதிரிபார்த்த பயன் வருவதில்லை. அப்போதைக்கு வந்ததாகத் தெரிந்தாலும், சில வருடங்கள் கழித்துப் பார்த்தால், அது நாம் எதிர்பார்த்தது போல இல்லை என்று தெரிகிறது அல்லது நாம் செய்ததற்கு சம்பந்தமே இல்லாதது போல இருக்கிறது. ஆனால் அதிமனதின் பண்பில் ஒன்றை எடுத்துச் செய்யும் போது, அப்படியே நாம் விரும்பியது வருவது மட்டுமல்ல பல வருடங்களுக்கு அது தொடர்ந்து பலன் கொடுப்பதைக் காணலாம். உதாரணம் என் மதுரை கிளை, அதன் MANAGER கதை என்று பலமுறை கூறியிருக்கிறேன். ஏறத்தாழ 2014 -il

நான் கடைபிடித்த பண்பு, மனமாற்றம், எட்டு வருடங்களாக ஆவர் மூலம் ஏதோ ஒரு பலனை அவ்வப்போது அடைந்துக் கொண்டு இருக்கிறேன். அதே போல SINGAPOREஇல் இருந்து வந்த LABOUR TEAM எப்படி பத்து வருடமாக என்னுடனே இருக்கிறது என்பது பற்றியும் பல முறை கூறியிருக்கிறேன்.

அது போல இந்திய நிதி அமைச்சர் பற்றி கூறியிருக்கிறேனா தெரியவில்லை. சுருக்கமாகக் கூறுகிறேன். 2017-இல் GST வந்த பிறகு எல்லாம் சரியாக வந்தாலும் INPUT CREDIT மட்டும் எடுக்க முடியாமல் இருந்தது. இது 2019 DECEMBER வரை தொடர்ந்தது. என்ன முயன்றும் என்னால் பெற முடியவில்லை. அந்த நிலையில் 48 லட்சம் என்னும் அளவில் இதற்கு மேல் சமாளிக்க முடியாது என்னும் அளவில் சென்று விட்டது. JANUARY 2020 இல் கர்மயோகியிடம் பேசிக் கொண்டிருந்த பொது, இது பற்றி சொல்லி, கடந்த கால சமர்பணம், நான் தர வேண்டியது, அனைத்தையும் தருதல் போன்றவற்றை செய்த பிறகும் அது தடையாக இருக்கிறது என்று கூறினேன். அவர் ஒன்றும் சொல்லவில்லை. வெவ்வேறு விஷயங்கள் பற்றி பேசிக் கொண்டு இருந்தோம். கிளம்பும் போது நிதியமைச்சர் மேல் உனக்கு வெறுப்பு இருந்தால் எடுத்து விடு, GST வந்ததன் மூலம் ஊழல், கருப்பு பணம், சட்ட விரோத பரிமாற்றம் குறைந்து இருக்கிறது என்று கூறினாய். அந்த நல்லெண்ணத்தை மேலும் அதிகப்படுத்தி ஆனந்தத்தை பார் என்றார். நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பற்றி அந்த கலந்துரையாடலில் நான் பேசியதாக எனக்கு நினைவில்லை. ஏதோ  EXPRESSIONனில் அது வெளிப்பட்டு இருக்கலாம். அதை நானே அறியாத போது அதை உன்னிப்பாக கவனித்து சொல்லியிருக்கிறார் கர்மயோகி. இது நடந்தது JANUARY 16, 2020. அப்போது அதை SERIOUSஆக எடுத்துக் கொள்ளவில்லை. அதன் பிறகு 30 JANUARY அவருக்கு உடல் நிலை சரியில்லாமல் போனது, மருத்துவமனையில் சேர்த்தது என்று ஆனதால், அது பற்றி வேறு எதுவும் பேச முடியவில்லை. மார்ச் 2020 LOCKDOWN அறிவிப்பு வந்த போது ஒரு மாதம் என்று சொல்லப்பட்டாலும், மூன்று மாதமாவது இருக்கும் என்னும் வதந்தி வந்ததால் EMI, சம்பளம், வாடகை, SUPPLIER PAYMENT என்று எல்லாவற்றையும் பற்றிய பயம் வந்தது. அப்போது கர்மயோகி சொன்னது ஞாபகம் வந்தவுடன் அதை செய்ய ஆரம்பித்தேன். நிதியமைச்சர் பற்றிய நல்லெண்ணத்தை வளர்க்க ஆர்மபித்து சிந்தித்தேன். பத்து நாட்களில் அதாவது MARCH 31 அன்று என் மொத்த INPUT CREDIT உம் 48 லட்சம் எனக்கு CREDIT ஆனது. அதை வைத்து தான் ஆறு மாத LOCKDOWN மற்றும் அடுத்த ஆறு மாத DULL PERIOD என்று அனைத்தையும் யாரும் குறை சொல்ல முடியாத அளவிற்கு ஓட்டினேன். என் GST இருக்கும் COIMBATORE CIRCLEஇல் என்னைத் தவிர யாருக்கும் அப்போது

வரவில்லை. என்னை முன் மாதிரியாகக் கொண்டே அடுத்து அடுத்து பலரும் பெற்றார்கள், என் ஒருவனுக்கு வந்த ஆனந்தம் அனைவருக்கும் வந்தது. அதிமனம் அல்லது அது விரும்பும் பண்புகள் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள நினைக்கும் அளவிற்கு நாம் அதற்கு இடம் கொடுக்கும் போது நிச்சயம் அது ஏதோ ஒன்றை படைத்து துன்ப கலப்பில்லாத ஆனந்தத்தை, நிரந்தரமான ஆனந்தத்தை தருகிறது. அதை  கர்மயோகி சுட்டி காட்டும் வரை அதை மனம் மூலம் செய்ய முயன்றேன். அதற்கான ஞானம், உறுதி இருப்பதாக நினைத்தேன். அதற்கான சமுதாய, ஆன்மீக பண்புகளை எடுத்துக் கொண்டே செய்தேன். ஆனால் நாட்கள் தான் கடந்து கொண்டு இருந்ததே தவிர பணம் வரவில்லை. காரணம் என் ஞானம், ஆற்றல், சித்தம், திறமை என்று எதுவும் இணைந்து இருக்கவில்லை. பிரிந்து இருப்பதை எப்படி ஒன்று சேர்ப்பது என்று தெரியவில்லை. ஆனால் அதிமனதில் அவை ஒருமை அடைகிறது. அதனால் அன்னையை நினைத்து, அவற்றையே செய்த போது மொத்த தொகையும் உடனே CREDIT ஆனது. மனம், ஞானம் உறுதி ஆகியவற்றை மட்டும் வேறுபடுத்தவில்லை, நம் பார்வை, பலன் என்று அனைத்தையும் பிரிவினை மூலமே பார்க்கிறது. மனம் அதன் அனுபவம், அதன் சாரம் ஆகியவற்றை ஒட்டியே செயல்படுகிறது. அதை தன் ஞானமாக நினைக்கிறது. தான் ஏற்கனவே பெற்ற பலனை செயலுக்கான சட்டமாக நினைக்கிறது. ஆனால் அந்த அனுபவங்களை, பலனை, ஒரு முழுமையின் பார்வையில், அதிமனத்தின்  பார்வையில் பார்க்கும் போது, அதில் ஒரு புது படைப்பாற்றல் இருப்பதைக் காண முடியும்

அதன் சுருக்கம் அதிமனம் என்பது சித்தின் சத்தியத்தையும் அதன் ஒருமைக்கான  சித்ததையும் ESSENTIAL UNITY  ஒன்றாகக் கொண்டு தொகுத்தறியும் சித்தத்தை பெறுகிறது. அதன் பிறகு அதை எப்படி படைப்பில் கொண்டு வருவது என்பதை பகுத்தறிந்து, அதை பகுத்தறியும் சித்தமாகப் பெறுகிறது. அப்படி செய்யும் போது அது எங்கும் எப்போதும், தன் சித்தத்தை, சித்தப்பூர்வமாக இருப்பதை, ஒருமையை இழக்காமல், பிரம்மத்துடன் உள்ள தன் தொடர்பை இழக்காமல், அதை செய்கிறது.

இன்னும் புரிவதற்காக இந்த படைப்பாற்றலை அது SELF GUIDING IDEA தன்னை பிரம்மத்தை நோக்கி வழி நடத்தும் , IDEA களாக தொகுத்து அறிந்து வைத்துக் கொள்கிறது. பின் அதை SHAPING IDEA. வடிவங்களாக உருவாக்கும், படைக்கும் IDEA களாக பகுத்தறியும் சித்தமாக வெளிப்படுத்துகிறது. அந்த நிலைகளை நாம் அனுபவிக்க முடியும். TOKEN ACT  போன்ற முறைகளை பயன்படுத்தி நாம் ஒரு முறையாவது உணர முடியும். நம் சித்தத்தை அதிமனதை நோக்கி திருப்புவதன் மூலம், ஒரு முழுமையை புரிந்துக்

கொள்வதன் மூலம் COGNITIVE CAPACITY என்று சொல்லப்படுவதன் மூலம் நாம் அதை அனுபவிக்க முடியும். அந்த முழுமையை புரிந்துக் கொள்ளும் போது அதற்கான ஞானத்தை பெறும் போது, INTEGRAL KNOWLEDGE ஒரு செயலைப்பற்றிய அனைத்து பரிமாணங்களைப் பற்றிய ஞானம் நமக்கு ஒன்றை படைக்கும் ஆற்றலைத் தருகிறது. அது அடுத்த கட்ட வாழ்வில் முன்னேற்றத்திற்கு எடுத்து செல்கிறது. மனப்பான்மையை உயர்த்தி பரிணாமத்தில் அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்கிறது. COMPLETE ACT முழுமையான செயல் என்பது பற்றி பல கட்டுரைகள், சொற்பொழிவுகள், karmayogi.net இல் உள்ளது. ஆனால் பெரும்பாலும் அவற்றில் உடல், உணர்வு, மனம், ஆன்மா போன்ற விளக்கங்கள் தான் அனைவரும் கொடுத்திருக்கிறார்களே தவிர, ஒரு செயல் முழுமை பெற அதன் CREATIVE ELEMENTஐ தொட வேண்டும் என்று எழுதியிருப்பார். அது பற்றி வேறு யாரும் பேசியதாக தெரியவில்லை. அது எப்படி படைக்கப்பட்டது, ஏன் படைக்கப்பட்டது படைத்தவரின் நோக்கம் என்ன போன்றவற்றை ஆராய்ந்து நாம் ஒன்ற முடிந்தால், அல்லது அதை பயன்படுத்த போகிறவருடன் ஒன்ற முடிந்தால், நமக்கும் படைப்பாற்றல் வரும் என்கிறார்.

2008யில் சொந்த தொழில் ஆரம்பித்த நான் பிறரது தயாரிப்புகளையே பயன்படுத்தி வந்தேன். 2015 வரை வெள்ளம் வரை. அதே போல செய்துக் கொண்டு இருந்த நான், சென்னை வெள்ளத்திற்கு பிறகு அன்னை முறைகளை பின்பற்றி, அதில் இருந்து மீண்டு வந்த பிறகு, எனக்கென்று MARKETஇல் ஒரு பெயர் ஏற்பட்டு இருந்தது தெரிந்தது. அடுத்த கட்டத்திற்கு, அதாவது சொந்த BRAND கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் மிகுதியாக வந்தது. உண்மையில் இது இந்த COMPANY ஆரம்பித்த போதே இருந்தது தான். அதனால் தான் 2010, 2012 ளிலேயே பல பிரிவுகளில் REGD TRADEMARK ஆக பதிவு செய்து இருந்தேன். இப்போது அந்த எண்ணம் வந்த பிறகு, ஏதாவது ஒரு தனித்தன்மை, UNIQUENESS இல்லாமல் அல்லது இந்தியாவில் இல்லாத ஒரு PRODUCT ஆகயிருக்க வேண்டும் என்பதில் மட்டும் தெளிவாக இருந்தேன். ஆனால் என்ன செய்வது என்று தெரியவில்லை. அல்லது தெளிவு இல்லாமல் இருந்தது.

நான் பல PROJECT செய்தால், ஒரு PROJECTஐ TOKEN ACT ஆக எடுத்துக் கொள்வது என் வழக்கம். அதில் அந்த product உடன் வரும் TEST CERTIFICATE படி நான் செய்வதும் RESULT தரவேண்டும் என்பது அப்படிப்பட்ட ஒன்று. ஒரு முறை அப்படிப்பட்ட PRODUCT - GERMANYயில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு PRODUCTஐ வைத்து COATING CONTRACT செய்து கொண்டு இருந்தேன். 85% அல்லது 90% RESULTஏ வந்துக் கொண்டு இருந்தது. LAB

REPORTஇல் 80% வந்தாலே நல்லது என்பது INDUSTRY ஏற்றுக் கொண்ட ஒரு விஷயம். அதனால் என் வேலையே மிகச் சிறந்தது என்று கூறலாம், என்றாலும் எனக்குத் திருப்தி வரவில்லை. ஏன் 100% வரவில்லை என்று மீண்டும் மீண்டும் படித்தேன். அந்த PRODUCT தயாரிப்பாளர் அல்லது PRODUCT MANAGER மனநிலையில் இருந்து அதை படித்தேன். பல முறை படித்த பிறகு அதை செயல்படுத்தும் இடத்தில் பொருத்தி பார்த்தேன். அப்போது அந்த MANUALஇல் சொல்லப்பட்டது ஒன்று ஞாபகத்திற்கு வந்தது. இதை மெதுவாகச் செய்தால் தான் வேகமாக பரவும் என்று இருந்தது. அது கொஞ்சம் புரியாது போல இருந்ததால் மேலும் படித்தேன். குறைந்த வேகத்தில் RPMஇல் செய்ய வேண்டும் என்பது பொருள் என்பது புரிந்தது. பொதுவாக வேகமாக கலந்தால் வேகமாக செய்ய முடியும் என்பதே பொதுக் கருத்து. அப்படி இருக்கும் போது இந்த தயாரிப்பாளர் ஏன் இப்படி சொல்கிறார் என்று சிந்தித்த போது, அந்த PRODUCTன் CHEMICAL COMPOSITION பற்றி ஒரு பொறி தோன்றியது. அதை பின்பற்றி நான் TRIAL போட்டு பார்த்த போது, ஒரு புதிய தனித்தன்மை வாய்ந்த PRODUCTஐ கொண்டு வந்து என் BRANDஇல் PROMOTE செய்ய முடிந்தது. சிறிய தனித்தன்மை வாய்ந்த market தான் என்றாலும் எனக்கு என்று அகில இந்திய அளவில் ஒரு பெயர் பெற்றுத் தரும் அளவிற்கு அது மாறி இருக்கிறது. இதற்கு காரணம் CREATIVE ELEMENT எனப்படும் அந்த தயாரிப்பாளரின் சித்தத்தை போலவே நான் அறிந்த அளவில் சிந்திக்க ஆரம்பித்தது. அதை ஒட்டி என் செயல்களை, FORMULATIONSஐ PRODUCTஐ மாற்றியது. CREATRIX அதாவது அந்த PRODUCTஐ படைத்தவரின் உயர் மனநிலையை நான் தோட்ட போது, அதே நிலைக்கு என்னால் ஓரளவு உயர் முடிந்தது. அந்த PRODUCTஐ வைத்து 400 கோடி செய்கிறார். நான் 4 கோடி செய்கிறேன் என்றாலும் அவர் நிலையை ஒரு அளவு தொட்டுவிட்டேன் என்பது உண்மை.

அது போல, நான் பல கூடல்களில் சொன்னது போல, நான் வேலை செய்த COMPANY முதலாளியின் ஆர்வத்தை , நோக்கத்தை, ஞானத்தை நான் எனதாக எடுத்துக் கொண்டு செய்த போது, அந்த COMPANYக்கே partner ஆனேன். பின் அதே போல ஒரு COMPANYஐ ஆரம்பித்து முதலாளியானேன். அல்லது அதே போல ஒன்றை படைக்கும் ஆற்றலை பெற்றேன் என்றும் கூறலாம். இதை அப்படியே அதிமனதில் அல்லது அன்னையில் பொருத்தி பார்த்தால், அவர் சித்தம், விரும்பும் பண்புகள், அவர் ஆர்வம், நோக்கம், பரிணாமம், சக்தி, ஆற்றல் போன்றவற்றை மனதில் வைத்து ஒன்றை செய்தால், அதற்கு தேவையான அனைத்தும் தானே வருகிறது. திறன், திறமை, ஞானம், சூழல் அனைத்தும் தானே அமைந்து அந்த காரியம் பூர்த்தியாகிறது. அதாவது அதிமனதின் ஆற்றலே நமக்குத் படைப்பாற்றல் தருகிறது. வரையற்ற

சித்தத்தில் இருந்து வரையறை உள்ள வடிவங்களாக மாற ஒன்றை படைக்க வேண்டும்,. அதற்கு சில அடிப்படை IDEA , ஆர்வம், ஞானம், உறுதி, ஆற்றல் தேவை. எது தேவை, எந்த அளவு தேவை, எதற்கு அடுத்தது எது தேவை என்பது போன்றவை புரியாததால், அப்படி நடந்த சிலவற்றை அதிசயம் MIRACLE என்கிறோம். அது நடக்காத போது புரியாததால், அதை மாயை என்கிறோம் என்று சென்ற அத்தியாயம் சொன்னது. அந்த PROCESS நமக்குத் புரிந்து விட்டால், அதை நம் செயல்களில் ஓரளவாவது பயன்படுத்த முடிந்தால், நம்மால் ஒரு புதிய திறனை பெற முடியும். புதியதை உருவாக்க முடியும். அதற்கு முதல் வழியாக கர்மயோகி சொல்வது - நீ வாழ்வில் தோற்றுவிட்டாய் என்பது போன்ற இடங்களில் முதலில் அதன் பின் உள்ள அடிப்படை உண்மையை கண்டுபிடிப்பது மட்டுமே என்கிறார். அந்த ஞானம் தான் அதிமனதின் ஞானம் போன்ற படைப்பாற்றல் கொண்டது என்கிறார் கர்மயோகி.

WISDOM IS TO DISCOVER THE PLAINEST TRUTH IN A FAILURE என்கிறார் கர்மயோகி. அதை ஏற்றுக் கொண்டு அதற்கு எதிரான உயர்நிலையில் பொருத்திப் பார்த்து, அந்நிலையை ஏற்பது உறுதி. அதாவது அந்த ஞானமும், உறுதியும், மனதுக்கு வரும் போது அதுவும் படைப்பாற்றல் பெறுகிறது. உதாரணமாக 35 வயதில் என் வாழ்வில் தோல்வி, நடத்தை, மனப்பான்மை ஆகியவற்றில் இருந்த தோல்வியை, அதன் பின் உள்ள முட்டாள்தனம், அறியாமை, வாழ்வின் PRIORITIES தெரியாதது போன்றவற்றை ஒத்துக் கொண்டேன். மாடு மேய்க்க மட்டுமெல்ல, பன்றி, வாத்து போன்றவற்றை மேய்க்க கூட நான் லாயக்கில்லை என்பதை ஏற்றுக் கொண்டேன். பின் அதை சமுதாய ஞானமான, வாழ்விற்கு அடிப்படை படிப்பு, DEGREE வேலை என்ற ஞானத்தை பொருத்தி பார்த்து அதை ஏற்றுக் கொண்டேன். அந்த ஞானத்தின் மேல் என் உறுதியை செயல்படுத்தியதால் இன்று இந்த நிலையில் இருக்கிறேன். அப்படி மாறிய அந்த சந்திப்பு, JUNCTION படைப்பாற்றல் கொண்டது என்பதை கவனித்து பார்த்தால் புரியும்.

முதல் நிலையில் நான் முன்பு சொன்னது போல அர்த்தமற்ற productivity இல்லாத நேரங்கள், வெட்டிப்பேச்சு, TV SERIAL , திரைப்படம் பார்க்கும் நேரங்கள், தேவையில்லாத BROWSING போராடிக்கும் நேரங்கள், செய்ய ஒன்றும் இல்லை என்று தோன்றும் நேரங்கள் ஆகியவற்றை பார்ப்பதோடு, அதற்கு மனம் கொடுக்கும் சமாதானங்களை கவனித்தால் - என்னால் என்ன செய்ய முடியும், என் LIMIT இவ்வளவு தான், என் தகுதி, திறமை இது தான், என் விதி, அவர் காரணம், இவர் காரணம், இது மட்டும் நடந்து இருந்தால் - என்று

நினைக்கும் இடங்களை கவனித்தால், நாம் ஜடமாக - சிந்திக்க கூட தெரியாமல் ஜடமாக இருக்கிறோம் என்பது புரியும்.

இது இறை சித்தம் அறியாமையில் மூழ்கி ignorance is bliss என்னும் அறியாமையை ருசிக்கும் ஜடமான நிலை. (PHYSICAL ) இந்த இடம் பற்றி, இத்தகைய நம் நிலை நமக்கு புரிந்தால், அந்த கீழ்மையான நிலை புரிந்தால், அது ஞானம், நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்ற உணர்வு வந்தால் - இதில் இருந்து நான் வெளியே வர வேண்டும், அதற்காக தேவையானவற்றை செய்ய வேண்டும், நிச்சயம் செய்வேன், செய்தே ஆக வேண்டும், இல்லையென்றால் எனக்கு முன்னேற்றமில்லை என் வாழ்வில் மாற்றம், ஆனந்தம் இருக்காது என்பதை ஏற்பது உறுதி அது VITAL.

அது நம்மை ENERGISE செய்தால், ஊக்கப்படுத்தினால், inspire செய்தால், அதை செய்ய வேண்டும் என்னும் உத்வேகத்தை கொடுக்கும் சக்தியை கொடுத்தால், அது EMOTIONAL .

அதற்கு என்ன செய்ய வேண்டும், எப்படி செய்ய வேண்டும், அதற்கு தேவையான சூழல், கருவி, திறமை, திறன், பண்புகள் போன்றவை புரிந்து ambition ஆக மாறினால், அது MENTAL.

இவையெல்லாம் ஆன்மீக பண்புகளின் அடிப்படையில் நடக்கும் போது உதாரணம், PERSEVERANCE , COURAGE , SINCERITY என்று நடக்கும் போது நாம் அதிமனதின் படைப்பாற்றலை, அல்லது அன்னையின் படைப்பாற்றலை தொடுகிறோம். அது SUPRAMENTAL .

அப்போது ஆன்மீக சக்தி, அன்னை சக்தி நம் வேலையை ஏற்றுச் செய்கிறது. அது தரும் ACCOMPLISHMENTS சாதனைகளை கவனித்தால், ஏதோ ஒரு இறை சித்தம் பரிணாமத்தில், மனிதனை முன்னேற்ற மட்டுமே செயல்பட்டுக் கொண்டு இருப்பது தெரியும். அதற்காக காத்துக் கொண்டு இருப்பது தெரியும். இன்று சொன்ன அனைத்து உதாரணங்களையும் அதன் அடிப்படைகளையும் கவனித்தால் நாம் உள்ளே மாறினால், மனம் மாறினால், மாற்றத்தை விரும்பினால், முன்னேற விரும்பினால், அது வெளியே வாழ்வில் நடப்பதை காணலாம். அது SUBJECTIVE , OBJECTIVE போன்ற கருத்துக்களுக்கு உதாரணம். அதாவது அகமே புறத்தை நிர்ணயிக்கிறது என்பதற்கு உதாரணம், அப்படி நிர்ணயிக்கும் போது நாம் எடுத்துக் கொள்ளும் உயர் மனநிலைகள், உயர் பண்புகளுக்கு ஏற்ப, நாம் பெற வேண்டியவைகளை

மிகக் குறைந்த காலத்தில் பெறுவதை கவனிக்க முடியும். அது காலத்துள் காலத்தை கடந்த நிலைக்கு உதாரணம்.

இவற்றின் மூலம் நாம் புரிந்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், CREATRIX - படைப்பாற்றல் கொண்ட அதிமனம் எங்கோ , தொட முடியாத நிலையில் இல்லை. நம்முள் முயன்றால் தொட்டு விடும் தூரத்தில் தான் இருக்கிறது. அதனை நாம் நம் மனதின் மூலம் அடைய முடியும். காரணம் மனம் அதிமனதில் இருந்துதான் தோன்றியது. ஆனால் சிருஷ்டியில் அது பிரிவினை பார்ப்பதாக மாறிவிட்டதால், நாம் அதை சற்றே திருப்பி, பரிணாமத்தை , ஒருமையை, இறை சித்தத்தை, சத்திய சித்தத்தை நோக்கித் திருப்ப வேண்டும். அது நம் வேலை. அதை முதலில் பார்ப்பதையும், கேட்பதையும் மாற்றுவதன் மூலம் செய்ய வேண்டும். நாம் பார்ப்பது, கேட்பது ஆகியவற்றில் முழுமை நமக்கு புரிந்தால் அது ஞானத்தையும் உறுதியையும் தரும். காரணம் மனதிற்கு சித்தத்தை உருவாக்கும் தன்மை உள்ளது. MIND IS THE PREPARATORY FORM OF CONSCIOUSNESS. அது புரிந்தால், என்னால் முடியாது என்பதே வராது. அதைத் தான் தினசரி செய்திகளில் "முடியாது என்பதே கிடையாது. பிடிக்கவில்லை என்பதே உண்டு" என்று எழுதியிருப்பார்.

ஒரு விஷயத்தை நாம் முழுவதும் புரிந்து கொண்டு அதை நம் முன்னேற்றத்திற்கு பயன்படுத்திகொள்ள, அதன் (PROCESS) இயங்கும் முறை தெரிய வேண்டும். அதன் தத்துவம் (PHILOSOPHY) புரிய வேண்டும், அது (MISSION) ஏன் வந்தது, எதற்கு இருக்கிறது, எதற்கு பயன்படுகிறது என்பது புரிய வேண்டும். அதன் மூலம் நம்பிக்கை ( BELIEF) வந்து, அது பின் அதி நம்பிக்கையாகி (FAITH), அது அசைக்க முடியாத நம்பிக்கை (TRUST) ஆக வேண்டும். அது பிறகு செயல்படும் சக்தியாக மாறி, திறமை, திறனாக மாற வேண்டும். கணிதம், விஞ்ஞானம், ஆன்மிகம் என்று எதை எடுத்து கொண்டாலும் இயங்கும் முறை ஒன்றே.

LIFE DIVINE வரிகளான "THE OBJECTIVE PROJECTION OF THE SPIRIT, THAT IS SUBJECTIVE" என்பதற்கு கர்மயோகி பொருள் கூறும் போது" உள்ளே உள்ள ஆன்மா வெளியே சத்தியமாக வெளிப்படுவது" என்கிறார். இதை இன்னும் புரியும்படி சொல்ல வேண்டும் என்றால்-பிரம்மம் ஆனந்தத்தை அனுபவிக்க சத்தில் அசைவை ஏற்படுத்தி இரண்டாக பிரியும் போது SPIRIT & TRUTH-ஆக பிரிகிறது. அதனால் சத்தியமே ஆன்மாவிற்கு மிக அருகில் இருப்பது. ஆன்மாவின் கதவே சத்தியம்தான் என்று கூட சொல்லலாம்.

அதனால்  சத்தியமே பிரம்மத்தின் முதல் படைப்பு – அதுவே -TRUTH CONSCIOUSNESS. அது பூமிக்கு அன்னை என்ற உருவகமாக பரிணாமத்தை துரித படுத்த வந்து மீண்டும் சத்தில் ஆன்மாவாகவும் உண்மையாகவும் இணையும் இடத்தில் சேர்ந்ததால் பிரம்மத்தின் பகுதியாகவே மாறி  விட்டார். இப்பொழுது என்ன செய்து கொண்டு இருக்கிறார்  என்றால், ஆனந்தத்தை அனுபவிப்பவனுக்கும் அவன் தேடும் ஆனந்தம் இருக்கும் இடத்தையும் சேர வைப்பது, துரித படுத்துவது என்ற இடத்தில் இருக்கிறார். அதுவே பரிணாம முன்னெற்றம். அது சத்தின் சட்டம். அதுவே அன்னையின் சட்டம். அன்னையின் சட்டம் என்பதால் உண்மைக்காக, பரிணாம வளர்ச்சிக்காக நாம் செய்யும் அனைத்திற்கும் உதவ கூடிய நிலையில் இருக்கிறார். அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருக்கிறார். இன்னும் ஒரு படி மேல போய் - இதுவரை பெற்று தரும் நிலையில் இருந்த அன்னை - இன்று தானே தரும் நிலைக்கு பரிணாமத்தில் முன்னேறி இறைவனின் பகுதியாகவே மாறிவிட்டார் துன்று கூறி நம்  நம்பிக்கையை அதிகப்படுத்துகிறார் கர்மயோகி.

அன்னை சொல்லும் , கர்மயோகி சொல்லும் உயர் சித்தத்தை அடைய நாமே முயல வேண்டும். சிந்திக்க வேண்டும். நம் மனதை , உணர்வை, செயல்களை நாமே ஆராய்ந்து அது வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கத்தை,   அதற்கும் நம் முன்னேற்றத்திற்கும் உள்ள தொடர்பை, ஆராய்ந்து அறிய வேண்டும். நாம் எங்கே தவறு செய்கிறோம் , எதை மாற்ற வேண்டும் , எதை பெற  வேண்டும் என்பதைபுரிந்து கொள்ள வேண்டும். வாழ்வில் வளம் , மனப்பான்மை இரண்டும் உயர உதவுபவை தவிர வேறுதுவும் தேவை இல்லை என்னும் தீர்மானம் நமக்கு வர வேண்டும். திடமான நோக்கம் நமக்கு வராததற்குக் காரணம் அந்த விஷயத்தில் நமக்குத்  தீவிரம் இல்லை என்பதால்தான்.

நம்மால் முடியும் என்னும் உணர்ச்சி பூர்வமான நம்பிக்கை – தீர்மானத்தை உறுதிப்பாடாக மாற்றும். அன்னை இருக்கிறார்கள். வேறு யார் தயவும் தேவை இல்லை என்னும் நம்பிக்கை வேண்டும்.   நம்பிக்கை வந்தவுடன் அதை செயல் படுத்த வேண்டிய பண்பை முடிவு செய்தால் அது திறமை, திறன் , நடத்தை, மனப்பான்மை , அன்னை முறைகள் என்று  எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம் - அந்த பண்பை உச்சத்தில் கடைபிடித்தால் அது இலக்கை அடைதலாக மாறும்.

சற்று முன் அன்னையை குழந்தையாக, தாயாக பார்க்க முடிந்தால் பார்க்கலாம், அதன் மூலம் அதிமனதை பெறும் ஒரு இடையறாத நினைவை உருவாக்க முடியும். அதே போல படைப்பாற்றலை அடிப்படையாகக்

கொண்ட பரிணாமத்தில் முன்னேறிய ஆற்றலை கொண்ட பண்புகளை பகவான் எட்டாகவும், அன்னை பண்ணிரெண்டாகவும் கூறினார் என்று கூறினேன். அதை வெளிப்படுத்தும் அல்லது அதை நோக்கிய முன்னேற்றமாக இருப்பதற்கு மனதில் செய்ய முடிந்த 12 பண்புகளை அன்னை தந்திருக்கிறார். அது தான் அன்னை SYMBOLலில் இருக்கும் பண்புகள். ஒவ்வொரு செயலிலும் அல்லது நடத்தை, மனப்பான்மை, வெற்றி, தோல்வி, துன்பம், ஆனந்தம் என்று எல்லாவற்றையும் அன்னை SYMBOLலில் உள்ள படைப்பாற்றல் கொண்ட பண்புகள், அல்லது அன்னை அருள் வெளிப்படும் பண்புகள் ATTRIBUTES OF GRACE ஆகியவற்றின் பார்வையில் பார்த்து செய்தால், அது சமர்ப்பணமான செயலாக மாறுவதால், அது முன்னேற்றம் மற்றும் ஆனந்தம் என்பதாகவே இருக்கும். அதை ஒவ்வொரு முறையும் யோசித்து செய்வது கடினம் என்பதால், அதற்கு ஒரு குறுக்கு வழி கண்டு பிடித்தேன். அதற்கு ஒரு வார்த்தை - acronym -செய்தேன். 3G 3P SHECAR . அதாவது G இல் ஆரம்பிக்கும் வார்த்தை மூன்று (GENEROSITY, GOODNESS, GRATITUDE) P யில் ஆரம்பிக்கும் வார்த்தை மூன்று (PEACE, PROGRESS, PERSEVERANCE), SHECAR எழுத்தில் ஆரம்பிப்பவை மீதி - SINCERITY, HUMILITY, EQUALITY, COURAGE, ASPIRATION, RECEPTIVITY. 3G 3P SHECAR.

ஒவ்வொரு செயலை ஆரம்பிக்கும் போதும் அன்னையிடம் சொல்லிவிட்டு இந்த வேலைக்கு என்ன தேவை, எந்த படைப்பாற்றல் கொண்ட பண்பு தேவை என்று ஆராய்ந்து செய்தால், பெரும்பாலும் அது வெற்றியாகவே இருக்கும். அதிலும் என் அனுபவத்தில் பெரும்பாலும் குழப்பமான நேரங்களில், தடையான நேரங்களில் SHECAR , SHECAR, SHECAR என்று சீத்தலை சாத்தனார் போல தலையில் தட்டிக் கொண்டால், இந்த ஆறு எழுத்துகளிலேயே அனைத்தும் முடிந்து விடும். குறிப்பாக அன்னை முறைகளை செய்ய தேவையான COURAGE – C நம்மிடம் இருக்காது. ஆசை இருக்கும்., முயற்சி இருக்காது அதாவது SINCERITY - S தேவை. அல்லது அகந்தை, கோபம், எரிச்சல், பொறாமை, போன்றவை இல்லாத அடக்கம் HUMILITY- H தேவை, STEP BACK , NON REACTION , SILENT WILL , போன்ற EQUALITY – E ன் பரிமாணங்கள் தேவை, அல்லது அன்னைக்கு எதிரான விஷயங்களை செய்ய கூடாது RECEPTIVITY – R ஐ அதிகப்படுத்த வேண்டும் என்று இந்த ஆறுக்குள்ளேயே பெரும்பாலும் அடங்கி விடும். அது போல G -GRATITUDE ஐ உயர்த்த வேண்டிய இடங்கள் தெரியும், P -PATIENCE பொறுமை விடாமுயற்சியை அதிகப்படுத்த வேண்டிய இடங்கள் நம் கண் முன் வரும். இவற்றில் எதை ஏற்றுச் செய்தாலும், நாம் அதிமன பண்புகள் தொடுமளவிற்கு பகுத்தறிந்து

செய்கிறோம்  என்று பொருள். அன்னையைத் தொடுகிறோம் என்று பொருள். அது வாழ்வில் புதைந்துள்ள ஆனந்தத்தை வெளிக் கொண்டு வரும்.

இந்த உயர் சித்தத்திற்கான  பிரம்மம் பெற விரும்பும் ஆனந்தம்.  நம் இலக்கை நாம் அடைந்து  விட்டால் கிடைக்கப்  போகும் சந்தோஷம் எப்போதும் நம் நினைவில் இருக்க வேண்டும். அதைவிட வேறுதுவும் பெரிதில்லை என்று இருக்க வேண்டும். அதற்கான பண்புகளை கடைபிடிக்கும் போது கிடைக்கும் சிறு சிறு வெற்றிகளை கவனித்து அதை அதிகப்படுத்த வேண்டும்.  நம்மால் முடிகிறது அன்னை  நமக்கு நேரடியாக பலிக்கிறார் என்று அதை கொண்டாட வேண்டும். செய்ய முடியாத இடங்களை ஏன் செய்ய முடியவில்லை என்று பார்த்து திறமையை அதிகப்படுத்த வேண்டும். ஏற்கனவே நம் determination ஆல் நாம் பெற்ற வெற்றியை நினைவுக்கு கொண்டு வந்து நம் ஆர்வத்தை அதிகப்படுத்த வேண்டும். அன்னையின் அவதார நோக்கத்தை புரிந்து ஏற்றுக் கொண்டு ,அதை ஒட்டிய வாழ்வை மட்டுமே வாழ்வது என்பது முக்கியம்..  அன்னை ஒரு பரிணாம சக்தி. அவர் நோக்கம் மனிதனை பரிணாமத்தில் உயர்த்துவது, அதிமனசக்தியை வெளிப்பட வைப்பது என்பது நமக்குத் தெரியும். அதை மட்டும் மனதில் கொண்டு வாழ்வை நடத்துவது. அதற்கான செயல் வடிவம், உணர்வு, மனப்பாண்மை கொண்டு வருவது. அவர் விரும்பிய மனிதனாக பரிணாமத்தில் முன்னேறுவது ஆகும்.

அடுத்த கூடலில் அடுத்த அத்தியாயத்தை பற்றி பேசலாம்.

==================================================